**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 116/2024**
**Old OS.No. 223/2022**
**Examination of - PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஜெகதீசன் |
| **Father Name** | : | பெருமாள் |
| **Village** | : | மங்களம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.11.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்களம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதி நாகராஜனை எனக்கு தெரியும். நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வா.சா.2ஆக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.1ல் உள்ள நிரப்பப்பட்ட சங்கதிகளை நான் தான் எழுதினேன் அந்த கையெழுத்து என்னுடையதுதான். ஆவணத்தில் கடைசியில் போடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **வா.சா.ஆ.4** ஆகும். வாதி கோரிய பரிகாரம் கிடைக்க பிராத்திக்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

வாதியை எனக்கு எத்தனை வருடங்களா தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். நீதிமன்றத்திற்கு யார் அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வாதி சொல்லித்தான் வந்துள்ளேன். இந்த வழக்கின் சாராம்சம் எனக்கு தெரியுமா என்றால்

நாகராஜனுக்கும் வெங்கடேசன் என்பவருக்கும் நெல் வாங்கிக்கொடுத்து அதன் பேரில் கடன்பெற்றது சம்மந்தமாக வழக்கினைப் பற்றி தெரிந்துகொண்டேன். வெங்கடேசனை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் ஓரிரு முறை பார்த்துள்ளேன். பணம் கேட்டல், கொடுத்தல் நிகழ்வு என்று நடந்தது என்றால் ஆகஸ்ட் மாதம், 15ம் தேதி, 2020ம் ஆண்டு நடந்தது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். மேற்படி தேதியில் நாகராஜன் என்னை அழைத்தாரா அல்லது நானே அங்கு சென்றேனா என்றால் நானே தான் அவருடைய வீட்டிற்கு சென்றேன். நாகராஜன் வீடு எங்கு அமைந்துள்ளது என்றால் கருமாரப்பட்டி என்ற ஊருக்கு அருகில் இருக்கும் மற்றொரு குக்கிராமமான பூந்தமல்லி என்ற இடத்தில் உள்ளது. நான் சென்ற நேரத்தில் யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் நான் சென்றபோது நாகராஜ் மட்டும் தான் அங்கிருந்தார். அதன் பின்னர் யார் வந்தார்கள் என்றால் பாரதிதாசன் வந்தார். அதற்கு அடுத்து இவ்வழக்கின் பிரதிவாதி வந்தார். நான் தற்செயலாகத்தான் அவரது வீட்டிற்கு சென்றேனா என்றால் சரிதான். வாதி இவ்வாறு கடனுறுதிச் சீட்டு எழுதவேண்டும் என்று யாரிடம் சொன்னார் என்றால் என்னிடம் சொன்னார்.மேற்படி கடனுறுதிச் சீட்டினை யார் வாங்கிவந்தார்கள் என்றால் பிரதிவாதிதான் வாங்கிவந்தார். மேற்படி கடனுறுதிச் சீட்டு நிரப்பட்டு இருந்ததா நிரப்பாமல் இருந்ததா என்றால் நிரப்பாமல் இருந்தது. மேற்படி கடனுறுதிச்சீட்டில் உள்ள விவரங்களை யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் பிரதிவாதிதான் சொன்னார். பிரதிவாதியின் தகப்பனாரின் பெயர் கோவிந்தன் ஆகும். நாங்களே ஒரு பொய்யான ஆவணத்தை உருவாக்க வேண்டி பிரதிவாதியின் தகப்பனார் பெயர் சின்னப்பையன் என்று எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியும் நானும் வேண்டும் என்றே பிரதிவாதியை

ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பிரதிவாதியின் தகப்பனாரின் பெயரை தவறுதலாகப்போட்டும் பிரதிவாதியின் கையெழுத்தைப்போட்டும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வெங்கடேசன் கையெழுத்தை ஆங்கிலத்தில் போட்டாரா தமிழில் போட்டாரா என்றால் ஆங்கிலத்தில் போட்டார். பாண்டில் எத்ததனை கையெழுத்து பிரதிவாதி போட்டார் என்றால் 2 கையெழுத்து போட்டார். அதன் பின்னர் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார் என்றால் முதலில் பிரதிவாதியும், அதன் பின்னர் பாரதிதாசனும் கையொப்பம் போட்டார்கள். எவ்வளவு தொகைக்கு பாண்டு எழுதினோம் என்றால் 50 ஆயிரம் ரூபாய்க்கு பாண்டு எழுதினோம். வட்டி ஏதேனும் எழுதினோமா என்றால் வழக்கமாக எழுதுவதுபோல் தான் 100ரூபாய்க்கு வட்டி 1 ரூபாய் என்று போட்டு எழுதினோம். முதலில் பாண்டுதான் எழுதப்பட்டது அந்த பாண்டு வாதியிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாதி பாண்டுத் தொகையை கொடுத்தார். அந்த கடன் தொகையை வாதி பிரதிவாதியிடம் கொடுத்த போது அந்த நிகழ்வை நான் நேரில் கண்டேனா என்றால் கண்டேன். ஏற்கனவே மேற்படி வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை நாங்கள் தயார் செய்துவிட்டு இந்த வழக்கை போட்டுள்ளோம் நான் சொல்வதுப்போல் எந்தவொரு கடனையும் பிரதிவாதி வாதியிடம் இருந்து பெறவில்லை, பிரதிவாதி கடனுறுதிச் சீட்டினை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– M.C. Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்